# கச்சத்தீவை மீட்போம்!

இலங்கை கடற்படையினர் 20 தமிழக மீனவர்களைக் கச்சத்தீவு அருகே கைது செய்துள்ளனர் என்ற செய்தி வந்துள்ளது. இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது பல தடவை தாக்குதல் நடத்தியுள்ளனர்; பல படகுகள் தாக்கப்பட்டுள்ளன; நூற்றுக்கணக்கான மீனவர்கள் பலியாகி இருக்கின்றனர். கச்சத்தீவிலுள்ள அந்தோணியார் கோவில் திருவிழாவுக்கு மீனவர் செல்லும் உரிமை கூட மறுக்கப்படுகிறது.

இவற்றுக்கெல்லாம் காரணம், தமிழர்களின் நலனைச் சிந்திக்காமல் 1976 ஜூலை மாதம் இலங்கைக்குக் கச்சத்தீவை இந்தியா தாரை வார்த்துக் கொடுத்ததாகும். மத்திய அரசு இலங்கை அரசுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின்படி, தங்களின் மீன்பிடி வலையைக் கூட கச்சத்தீவில் உலர்த்தச் செல்ல முடியாத சூழ்நிலை தமிழக மீனவர்க்கு ஏற்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினை நாடாளுமன்றத்திலும், தமிழக சட்டமன்றத்திலும் பல்வேறு அரசியல் கட்சிகளின் மேடைகளிலும் பேசப்படுவதோடு, கச்சத்தீவை இந்தியா திரும்பப் பெற வேண்டும் என்ற கோரிக்கை மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டும் வருகிறது.

கடந்த 3.10.1991- இல் தமிழக சட்டமன்றத்தில், கச்சத்தீவைத் திரும்பப் பெற வேண்டும் என்ற தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

கச்சத்தீவு, உண்மையில் இராமநாதபுரம் சேதுபதி அரசருக்குச் சொந்தமானது. இத்தீவில் மருத்துவத்திற்குத் தேவைப்படும் பல்வேறு மூலிகைகளும், உமிரி, சாய வேர் என்ற “பச்சிலைகளும் இருந்தன. இதைப் பெற ஜனாப்முகமது காதர் மரக்காயர், முத்துசாமிபிள்ளை என்ற வணிகர்களுக்கு அரசர் சேதுபதி ஐந்து ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கி இருந்தார் (ஆவணம்: இராமநாதபுரம் துணைப் பதிவாளர் அலுவலக ஆவண - எண், 510/70). ஆண்டாண்டு காலமாக, இத்தீவு இராமநாதபுரம் அரசின் ஆட்சிக்குட்பட்ட பகுதியாக இருந்தது. அதற்குப் பின்பு, 1947-இல் ஜமீன்தார் ஒழிப்புச் சட்டத்தின் மூலம் இந்தியாவிற்குச் சொந்தமானது.

பாக் ஜலசந்தியில் இந்தியாவின் தென் கடற்கரையில் பாம்பன் தீவுக்கு அருகில் கச்சத்தீவு உள்ளது. சுமார் 1 மைல் நீளமும், சுமார் 1000அடி அகலமும் கொண்ட இத்தீவு, பவளப் பாறைகளைக் கொண்டது. கடந்த காலங்களில் ஆங்கிலேய கப்பல் படையினர், வெடிகுண்டு சோதனை செய்யவும், தங்களுடைய பொழுது போக்கிற்கு ஏற்ற இடமாகவும் இத் தீவைத் தெரிவு செய்திருந்தனர். 1955-ஆம் ஆண்டு இலங்கை அரசு கச்சத்தீவில் தன் கடற்படை வீரர்களுக்குப் பயிற்சி அளிக்க எடுத்த முயற்சியை இந்திய நாடாளுமன்றம் கண்டித்தது.

இப்பிரச்சினை குறித்து நாடாளுமன்றத்தில் வைகோ பல சமயம் பேசியுள்ளார். கச்சத் தீவு குறித்து 23.7.1974-இல் இராமநாதபுரம் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினரும், பார்வர்டு பிளாக் தலைவருமான பி.கே.மூக்கையா தேவர் கண்டனத்தைத் தெரிவித்துவிட்டு,நாடாளுமன்றத்தில் வெளிநடப்பு செய்தார். அதுபோன்று பெரியகுளம் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் முகமது

செரிப்பும் வெளிநடப்பு செய்தார். கம்யூனிஸ்டு தலைவர் எம். கல்யாணசுந்தரம், இரா. செழியன், முன்னாள் அமைச்சர் செ. மாதவன் போன்றோர் நாடாளுமன்றத்தில் இப்பிரச்சினை குறித்து பேசி உள்ளனர்.

கச்சத்தீவு இந்தியாவிற்குச் சொந்தம் என்பதற்குக் கீழ்கண்டுள்ள ஆவணங்கள் சான்று கூறுகின்றன.

1. இராமநாதபுர அரசரின் ஆட்சிச் செயலாளர் (Administrative Secretary) 20.4.1950-இல் எஸ்டேட் மேலாளருக்கு எழுதிய மடலில் 1929 - 1945 ஆம் ஆண்டுகளில்

மீன் பிடித்துறைகளைப் பற்றிய கோப்புகள் அனுப்பப்பட்டிருக்கின்றன என்றும், அந்தக் கோப்புகளில் கச்சத்தீவைப் பற்றியது ஒன்று எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. தூத்துக்குடியில் இருந்த முத்து – மீன் வளத்துறையின் உதவி இயக்குநரின் கடிதத்தோடு கூடிய (1943) ,ஆர். கணேசன் என்பவர் தயாரித்த நிலப்படத்தில் கச்சத்தீவு குறிக்கப்பட்டுள்ளது.

3.1913 முதல் 1928 வரையான 15 ஆண்டுகளுக்கு மீன் வளத்துறைக்கான ஆங்கில அரசு விட்ட சங்கு, சிப்பி குத்தகை இடங்களில் கச்சத்தீவும் ஒன்று. 1936-இல் குத்தகை விதிகள் புதுப்பிக்கப்பட்ட போதும், கச்சத்தீவு அந்தக் குத்தகை இடங்களில் ஒன்றாக இருந்தது.

4.19.2.1922-இல் இராமநாதபுரத்தின் திவானாக இருந்த ஆர். சுப்பையா நாயுடு என்பவர், ஆர். இராஜேசுவர சேதுபதிக்குத் தம் கடல் எல்லைகளைப் பற்றித் தந்த விளக்கங்களில், கச்சத்தீவைப் பற்றிய விவரம் அடங்கியுள்ளது. இந்த ஆவணம் ஏற்றுக் கொள்ளப்பட்ட நாள்: 27.2.1922.

5.1.7.1947- இலிருந்து 30.6.1949 வரை கச்சத்தீவு குத்தகையாக விடப்பட்டது. குத்தகை ஒப்பாவணம் பதிவு செய்யப்பட்ட நாள் 26.7.1947, இராமநாதபுரம் சார்பதிவாளர் அலுவலக எண். 278/48.

விக்டோரியா மகாராணி காலத்தில் இலங்கை எல்லை பற்றிய ஆங்கிலேயே அரசின் அறிவிப்பில் கச்சத்தீவு குறிப்பிடப்படவில்லை. இத்தீவு இராமநாதபுரம் சமஸ்தானத்திற்குச் சொந்தமானது என்று இலங்கை அமைச்சரின் செயலாளர் பி.பி.பீரிஸ் கூறுகிறார்.

எனவே, கச்சத்தீவு இந்தியாவிற்குச் சொந்தமானது என்று தெளிவாகத் தெரியும்போது, மத்திய அரசு இதில் மெத்தனப்போக்கில் இருப்பது, குறிப்பாக தமிழகத்தை வஞ்சிக்கும் செயலாகும். கச்சத்தீவு இந்தியாவின் தன்மானப் பிரச்சினை மட்டுமல்லாமல், பாதுகாப்புப் பிரச்சினையாகும்.

கச்சத்தீவைத் திரும்பப் பெறுவதில், இந்தியா தன்னுடைய எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். பன்னாட்டு அளவில் இப்படிப்பட்ட சிக்கல்கள் பல காலங்களில் எழுந்துள்ளன. அமெரிக்க நாட்டிற்கும் - நெதர்லாந்து நாட்டிற்கும் பால்மஸ் தீவுபிரச்சினை; டென்மார்க் நாட்டிற்கும் -

நார்வே நாட்டிற்கும் இடையிலான கிழக்கு கிரின்லேண்ட் தீவுப் பிரச்சினை; பிரிட்டன் நாட்டிற்கும் பிரான்சுக்கும் இடையிலான மின்கொயர்ஸ் - எக்ரோ என்ற தீவு பிரச்சினை போன்றவற்றில் சிக்கல்கள் எழுந்துள்ளன. இந்தப் பிரச்சினைகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட முடிவின்படி கச்சத்தீவும்

இந்தியாவிற்குச் சொந்தம் என்று நிச்சயமாக நிரூபித்தும், சட்டத்தின் மூலமாகவும், பன்னாட்டுச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள மரபுகள் மற்றும் உடன்படிக்கையின் அடிப்படையிலும் திரும்பப் பெறலாம்.

இந்தியப் பெருங்கடலில் டீ கோ கார்ஸியாவில் அமெரிக்க ஆதிக்கம் கால் வைத்ததை இந்தியா வன்மையாகக் கண்டித்தது. அப்படிப்பட்ட ஆதிக்கச் சக்திகள் இலங்கையின் தயவால் கச்சத்தீவை நெருங்க முடியும். அதனால், இந்தியாவினுடைய பாதுகாப்பிற்கும், இறையாண்மைக்கும் பிற்காலத்தில் ஆபத்து ஏற்படக் கூடும்.

கச்சத்தீவால் ஏற்படும் நன்மைகள்:

1. இலங்கையில் வெளி ஆதிக்க சக்திகள் தலையீட்டால் இந்தியாவுக்கு நேரக்கூடிய பாதுகாப்பு அபாயங்களைத் தடுக்க இது ஒரு பாதுகாப்பு அரணாக இருக்கும்.

2. இத்தீவு. இந்தியாவிற்குப் பாதுகாப்பு வளையமாகவும், சேது கால்வாய்த் திட்

டத்தை நடைமுறைப்படுத்தவும், பல்வேறு வகையில் பயன்படும்.

3. அணு ஆராய்ச்சிக்கு ஏற்ற இடமாகும்.

4. இந்தியக் கப்பல் படையினருக்குப் பயிற்சிக் களமாக அமைய, ஏற்ற பகுதியாகும்.

5. போர் விமானங்கள் இறங்கவும் இத்தீவு ஒரு திட்டாக அமையும்.

6. செய்தித் தொடர்பு, கடல் எச்சரிக்கை போன்ற தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்த இத்தீவு ஏற்றதாக இருக்கும்.

7. மீன் மற்றும் கடல் செல்வங்களைப் பற்றிய ஆராய்ச்சிக்கு ஏற்ற இடமாக இருக்கும்.

மேற்கண்ட காரணங்களை வைத்து ஆராய்ந்தால் மத்திய அரசு கச்சத்தீவை உடனே மீட்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பது அவசர அவசியமாகும்!

***தினமணி*** 07.10.2004